<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>
<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**MCOP.No:** 300/2022 நாள் 07.10.2025

ம.சா.1, திருமதி. மலர்கொடி

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என்ன விபரம் சொல்லியுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியும். கடந்த 04.08.2021ம் தேதி என் கணவர் என் வீட்டை விட்டு கோட்டையூர் செல்வதாக சொல்லி தான் சென்றார். கோட்டையூரில் இருந்து மேற்கு திசையில் தம்பிபட்டி செல்வதற்கு 7 கி.மீ துூரம் இருக்கும் என்றால் சரிதான். என் கணவர் அந்த ஊருக்கு கரும்பு வேலை விசயமாகத்தான் சென்றார். பொதுவாக வத்திராயிருப்பு பகுதியில் எந்த பகுதியிலும் கரும்பு தோட்டம் இல்லை என்று சொன்னால் அப்படியில்லை. என் கணவர் வீட்டை விட்டு கிளம்பும் போது மாலை மணி 5 இருக்கும். என் கணவருக்கு உரிய சொந்தமான இருசக்கர வாகனத்தில் அவர் தனியாகவும் வேறு இருசக்கர வாகனத்தில் அவர்களது நண்பர்களான பொன்ராஜ் மற்றும் ரமேஷ் ஆகியோர்களும் சென்றார்கள். நான் சொல்வது தவறு என்றும் என் கணவர் TN 84 E 1508 என்ற இருசக்கர வாகனத்தில் அவருடைய நண்பரான பொன்ராஜ், ரமேஷ் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து தான் பயணம் செய்தார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. என் கணவரின் நண்பர்களான பொன்ராஜ் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் வேறு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்பதற்கான இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை பொறுத்து நான் கொடுத்த புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் என் கணவரும் இவரதுஇரு நண்பர்கள் இருவரும் சேர்ந்து TN 84 E 1508 என்ற இருசக்கர வாகனத்தின் அதிவேகமாக அஜாக்கிரதையாக கவனக்குறைவாக ஓட்டிசென்றதில் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் மனுவிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் என் கணவருக்கு எதிராக மேற்கில் இருந்து கிழக்காக TN 84 B 0140 என்ற பாஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தை எதிரே தம்பிபட்டி ஊரை சேர்ந்த அழகன் மகனான 2ம் எதிர்மனுதாரர் சுந்தரராஜ் என்பவர் ஓட்டி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . 2ம் எதிர்மனுதாரர் விபத்து நேரத்தில் மைனர் என்று சொன்னால் அது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. அவர் மைனர் என்றால் எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் தம்பிபட்டி ஊரில் இருந்து கோட்டையூர் நோக்கி இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடவேண்டி வண்டியை சாலையின் வடக்க பக்கம் ஓரமாக தள்ளிக்கொண்டு தான் சென்றார் என்று சொன்னால் அப்படியில்லை. சம்பவமானது இரவு சுமார் 7.00 மணியளவில் நடந்துள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பகுதியானது புளியமரங்கள் மற்றும் மரங்கள் அடர்ந்த பகுதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் தான் இருசக்கர வாகனத்தை அதிகவேகமாகவும்

அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று நிலை தடுமாறி வடக்கு திசை சென்று எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் அது சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பழைய செருப்பினை தைக்கும் தொழிலை செய்யும் இனத்தை சார்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து ஏற்பட்டவுடன் என் கணவருடன் சென்ற பொன்ராஜ், ரமேஷ் ஆகியோர்கள் 2ம் எதிர்மனுதாரரை அவர் தான் விபத்துக்கு காரணம் என்று சொல்லி மிரட்டி அவருக்கு எதிராக பொய்யான புகரை நான் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.நாங்கள் கோரியுள்ள விபத்து இழப்பீடு தொகை மிகவும் அதிகமானது என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் கோரியுள்ள விபத்து இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07th day of October 2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.